செ.வெ.எண்:22 நாள்:14.05.2019

# பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்டம், கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் கால்நடைகளுக்கு கோடைக்காலத்தில் ஏற்படும் பல்வேறு அயற்சிகளில் உயர் வெப்பத்தால் ஏற்படும் பெரும் அசௌகர்யம் மற்றும் உடலியல் மாற்றங்களால் அவற்றிலிருந்து பாதுகாக்க கீழ்க்கண்டவாறு பராமரிக்க வேண்டும்.

1. கால்நடைகளுக்கு ஒரு நாளைக்கு 4 அல்லது 5 முறையாவது சுத்தமான குளிர்ந்த குடிநீர் குடிப்பதற்கு கொடுக்க வேண்டும். கறவை மாடுகளுக்கு எப்பொழுதும் தண்ணீர் கிடைக்கும் வகையில் தண்ணீர்தொட்டி அமைக்க வேண்டும்.
2. கால்நடை கொட்டகைகளில் உப்புக்கட்டிகளை கட்டி தொங்கவிட வேண்டும். அதன் மூலம் கால்நடைகளில் தண்ணீர் பருகும் தன்மையை அதிகரித்து உப்பு சம்பந்தமான நோய்கள் வராமல் பாதுகாக்கலாம்.
3. மாட்டுக் கொட்டகையில் கூரைக்கு மேலே நீர் தெளிப்பான் அமைக்கலாம். இதனால் மாடுகள் வெயில் தாக்கத்திலிருந்து விடுபட்டு தீவனங்களை அதிகமாக உட்கொள்ளும், பால் உற்பத்தியும் அதிகரிக்கும்.
4. மாட்டுக் கொட்டகையை சுற்றி விரைவாக வளரும் நிழல் தரும் மரங்களை நடுவதன் மூலம் கொட்டகை பகுதியினை குளிர்ச்சியாக வைத்திருக்கலாம்.
5. கோடைகாலங்களில் கால்நடைகளை காலை 6 மணிமுதல் 10 மணி வரையிலும், மாலையில் 3 மணி முதல் 7 மணி வரையிலும் மேய்ச்சலுக்கு அனுப்பலாம். கம்பிவலை பின்னப்பட்ட மேய்ச்சல் நிலங்களில் இரவு நேரங்களில் மாடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பலாம்.
6. கோடைக்காலங்களில் கால்நடைகளில் தீவன தேவைகளை பூர்த்தி செய்ய மண்ணில்லா நீரியல் பசுந்தீவன உற்பத்தி (Hydroponics) அசோலா பசுந்தீவன உற்பத்தி ஆகியவற்றை மேற்கொள்ளலாம்.
7. பருவ மழைக்காலங்களில் பசுந்தீவனம் அதிகமாக இருக்கும்பொழுது, அவற்றினை ஊறுகாய் தீவனமாக மாற்றி சேமித்து வைத்து கோடையில் கால்நடைகளுக்கு உணவாக அளிக்கலாம்.
8. பொதுவாக கொடிக்காய்புளி, வாகை, வேம்பு, கருவேல், சுபாபுல், மா, பலா, ஆல், அகத்தி, அரசு போன்ற மரங்களின் இலைகள் ஆடுகளுக்கு சிறந்த உணவாகும். கிராமங்களில் அதிகமாக கோடையில் கிடைக்கும் வெல்வேல் மற்றும் கருவேல் உலர் காய்கள் ஆடுகளுக்கு மிக சிறந்த புரதச் சத்து மிக்க உணவாகும்.

9. ஒரு ஆடு 8 முதல் 12 லிட்டர் அளவிற்கு தினசரி நீர் அருந்தும். கோடைக்காலத்தில் அதிக வெப்பநிலை நிலவுவதால் மேய்ச்சல் பகுதியில் நல்ல சுத்தமான குடிநீர் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.
10. கோழிகளுக்கு உச்சிவெயில் நேரத்தில் தீவனம் அளிக்கக்கூடாது. இரவிலும், விடியற்காலை பொழுதிலும், விளக்கு ஒளியிலும் தீவனம் அளிக்க வேண்டும். இதனால், வெயில் குறைந்த நேரங்களில் கோழிகள் அதிக தீவனம் எடுக்க உதவும்.
11. கோடையில் கோழிகளுக்கு வழக்கத்தை விட அதிகமான இடவசதி அளிக்க வேண்டும். அதாவது, ஒருஅறையில் வழக்கத்தை விட 20 விழுக்காடு குறைவான எண்ணிக்கையிலேயே கோழிகளை வளர்க்க வேண்டும்.
12. கோழிகளுக்கு குடிநீரில் வைட்டமின் சி மருந்தினை தலா கோழி ஒன்றிற்கு 10 மிலி கிராம் வீதம் கலந்து கொடுத்து வந்தால், கோழிகளுக்கு ஏற்படும் அயற்சி ஓரளவு குறைக்கலாம். மேலும், அயற்சி நீக்கும் பிகாம்ப்ளக்ஸ் வைட்டமின், குளுக்கோஸ் போன்றவை கலந்து கொடுக்கலாம்.
13. கோடைகாலங்களில் கால்நடைகளை இடமாற்றம் செய்வதை நன்கு திட்டமிட்டு அவற்றின் நலன் பாதிக்காத வண்ணம் செயல்படுத்த வேண்டும்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.